# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2315/20 - 2023 ජනවාරි මස 18 වැනි බදාදා - 2023.01.18

2315/20 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ் வாரியபொல பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

வாரியபொல பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி, அனுமதிபெறாது தொடர்ச்சியாக மூன்று மாத சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) ஆம் பிரிவின் கீழ், வாரியபொல பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அதிகாரி முதியன்சேலாகே சமன் பண்டார அதிகாரி என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா மக்கள் பக்ஷய என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான வாரியபொல பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக மான்னப்பேரு முதியன்சேலாகே சரணதிஸ்ஸ தர்மபிரிய பண்டார என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

வாரியபொல பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான ரத்நாயக்க முதியன்சேலாகே ஹரேந்திர பண்டார ரத்நாயக்க ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு மான்னப்பேரு முதியன்சேலாகே சரணதிஸ்ஸ தர்மபிரிய பண்டார என்பவர் வாரியபொல பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**ஆர். எம். எச். பீ. ரத்நாயக்க,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
வாரியபொல பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
குருநாகல்,
*2023*, சனவரி *16*.

EOG *01 - 0185*